ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி சகாயம்

# சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்


போன் : 04575 - 241233

அனுப்புனர்

**பா.இளங்கோ** பி.காம்., பி.எல்.,
**தேவஸ்தானம் மேலாளர்,**
எண்.99 பழைய அரண்மனை வளாகம்
சிவகங்கை – 630 561.
சிவகங்கை மாவட்டம்
E-mail ID : managersivagangaidevasthanam@gmail.com


பெறுநர்

இணை ஆணையர்,
இந்துசமய அறநிலையத்துறை,
சிவகங்கை

ந.க.எண். D5 1095/2022 நாள் : 27.05.2022

ஐயா,

பொருள்– சிவகங்கைசமஸ்தானம்தேவஸ்தானம்–திருக்கோஷ்டியூர் அருள்மிகு சௌமியநாராயணப்பெருமாள்திருக்கோயில்– பலவகை வருவாய்குத்தகை இனங்கள் 1432ம்பசலிக்கு மட்டும் 17.06.2022 ந்தேதி பொதுஏலம்/டெண்டர் நடைபெறுதல் சம்மந்தமாக

பார்வை– சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் மேதகு பரம்பரை அறங்காவலர் /ராணி சாஹிபா அவர்கள் தீர்மானம் எண் 4083 நாள் 27.05.2022

---

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட திருக்கோஷ்டியூர் அருள்மிகு சௌமியநாராயணப்பெருமாள் திருக்கோயிலுக்குப் பாத்தியமான பலவகை வருவாய் தரும் குத்தகை இனங்களை 1432ம் பசலிக்கு மட்டும் (01.07.2022 முதல் 30.06.2023 முடிய ) அனுபவித்துக்கொள்ளும் உரிமையினை17.06.2022ந்தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 12.00 மணிக்கு ஷ ஆலயத்தில் வைத்து பொதுஏலம்/டெண்டர் நடத்திட சிவகங்கை இந்துசமய அறநிலையத்துறை உதவிஆணையர்அவர்களை கலந்து நாள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏல இனங்கள் விபரம் | கடந்த 3 பசலி குத்தகை தொகை விபரம் | | |
|---|---|---|---|---|
| | | பசலி 1429 | பசலி 1430 | பசலி 1431 |
| 1 | வாகனகட்டணம் வசூல் செய்யும்உரிமம் | 4,85,000/– | 1,30,000/– | 3,51,000/– |
| 2 | பிரசாதஸ்டால் வைத்து நடத்தும் உரிமம் | 6,62,500/– | 3,60,000/– | 5,61,850/– |

மேற்கண்ட இனங்களுக்கு சிவகங்கை இந்துசமயஅறநிலையத்துறை உதவிஆணையர் அவர்கள் முன்னிலையில் பொதுஏலம்/டெண்டர் நடத்திடவும், 17.06.2022 தேதியன்று நடைபெறவிருக்கும் மேற்கண்ட பொதுஏலத்தில் சிவகங்கை இந்துசமயஅறநிலையத்துறை உதவிஆணையர் அவர்கள் கலந்து கொள்ள தக்க உத்தரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொது ஏலம்/ டெண்டர் நோட்டீசுகளில் ஒன்றை இணை ஆணையர் அலுவலகவிளம்பரப்பலகையில் ஒட்டி விளம்பரம் செய்திடவும் பணிவுடன் வேண்டப்படுகிறது.

ஒம்/பா இளங்கோ
தேவஸ்தானமேலாளர்

/உ ந உ ப/

சிரஸ்தார் (பொ)

நகல் – உதவிஆணையர், இ ச அ துறை, சிவகங்கை
இத்துடன்இணைக்கப்பட்டுள்ள ஏல நோட்டீசுகளில்ஒன்றை உதவிஆணையர் அலுவலக விளம்பரப்பலகையில் விளம்பரம் செய்திடகேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகல் – ஆய்வர், இ ச அ துறை, திருப்பத்தூர்
ஏலநோட்டீஸ்ஒன்றுஇணைக்கப்பட்டுள்ளது.

நகல் –தேவஸ்தானகண்காணிப்பாளர் திருக்கோஷ்டியூர் சரகம் – இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 4 ஏல நோட்டீசுகளையும் நன்கு முறைப்படி விளம்பரம் செய்தும், முன்பசலிகுத்தகை தாரர்களிடம்கையொப்பம்பெற்றும், அதில்ஒன்றை ஏல தேதிக்குமுன் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

நகல் கட்டுக்கு

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம்

ஸ்ரீசௌமியநாராயணப்பெருமாள் திருக்கோயில் திருக்கோஷ்டியூர்

1432ம் பசலி பொதுஏலம்/டெண்டர் அறிவிப்பு

நாள் 27.05.2022

ந க எண் D5-1095/2022

சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட ஸ்ரீசௌமியநாராயணப் பெருமாள் திருக்கோயில் கீழ்க்கண்ட குத்தகைஇனங்களை 1432ம் பசலிக்கு 01.07.2022 முதல் 30.6.2023 வரை அனுபவித்துக்கொள்ளும் உரிமையினை 17.06.2022 வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணிக்கு பொதுஏலம்/டெண்டர்_ஷ ஆலயத்தில் வைத்து சிவகங்கை இந்துசமய அறநிலையத்துறை உதவிஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

| வ.எண் | ஏல இனங்கள் விபரம் | டிபாசிட் தொகை |
|---|---|---|
| 1 | வாகனகட்டணம் வசூல் செய்யும்உரிமம் | ரூ 1,50,000/– |
| 2 | பிரசாதஸ்டால் வைத்து நடத்தும் உரிமம் | ரூ 2,50,000/– |

17.06.2022 ந்தேதி பகல் 12.00 மணிக்கு மூடிமுத்திரையிட்ட டெண்டர்கள் மேலாளர், சிவகங்கை தேவஸ்தானம் என்ற முகவரிக்கு கோரப்படுகின்றது.

பொதுஏலம்/டெண்டர் நிபந்தனைகள்

1. வரிசை எண் 1, 2 ல் உள்ள குத்தகை இனங்களுக்கு மட்டும் பொதுஏலம்/.டெண்டர் கேட்க விருப்பமுள்ளவர்கள் மேற்கண்ட ஏல இனங்களுக்கு, டிபாசிட் தொகைக்கு மேலாளர், சிவகங்கை தேவஸ்தானம் என முகவரியிட்டு வங்கிகேட்பு வரைவோலை ( டி டி ) மூலம் செலுத்தி ( சிவகங்கையில் மாற்றத்தக்கவகையில் ) அதற்கான ரசீதை டெண்டருடன் இணைத்து கொடுக்கவேண்டும். எக்காரணம் கொண்டும் ரொக்கமாக பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.
2. முன்பசலியின் குத்தகை பாக்கிதாரர்கள் டெண்டர்/பொதுஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.
3. 17.06.2022 முற்பகல் 11.30 மணி வரை டெண்டர் பெற்றுக்கொள்ளப்படும். பகல் 12.00 மணிக்கு சிவகங்கை இந்துசமயஅறநிலையத்துறை உதவிஆணையர்அவர்கள் முன்னிலையில் பொது ஏலம் / டெண்டர் நடத்தப்படும்.
4. டெண்டர்தாரர்கள் டெண்டரில் குறிப்பிடும் தொகையினை எண்ணாலும் எழுத்தாலும் அடித்தல் திருத்தம் இல்லாமல் எழுதி கையொப்பம் மற்றும் தேதியிடல்வேண்டும். முன்னதாக திருக்கோயில் மற்றும் 99, பழையஅரண்மனை வளாகம், சிவகங்கை தேவஸ்தானம் தலைமைஅலுவலகம் ஆகிய இரண்டு அலுவலகத்திலும் ரூ 100 செலுத்தி டெண்டர் பாரம் 01.06.2022 முதல் 17.06.2022 தேதிவரை முற்பகல் 11.00 மணி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்..
5. ஏலத்தில் உயர்ந்த கேள்விக்குப்பின் டெண்டர்தார்கள் முன்னிலையில் டெண்டர்கள் திறக்கப்படும். பொதுஏலம்/டெண்டரில் உயர்ந்த கேள்வியாக கேட்கப்பட்ட கேள்வி தாரர்களுக்கு சென்னை இந்துசமயஅறநிலையத்துறை ஆணையர்அவர்களின் ரத்து அங்கீகாரத்திற்கு உட்பட்டு டெண்டர்/பொதுஏலம் குத்தகை உரிமை முடிவு செய்யப்படும்.
6. டெண்டரில் கலந்துகொள்ளும் நபர்கள் அதே வரைவோலையுடன் பொதுஏலத்தில் கலந்துகொள்ளலாம்.
7. உயர்ந்தகேள்விதாரர் டெண்டர்/ஏலத்தொகை முழுவதையும் உடன் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.
8. உயர்ந்த கேள்விதாரர் 6ல் கண்ட நிபந்தனையின்படி ஏலத்தொகை செலுத்த தவறினால் மறுஏலம்/டெண்டர் நடத்தப்படும். அவ்விதம் நடத்தப்படும் மறுடெண்டர்/பொதுஏலம் குறைந்த தொகைக்கு சென்றால் டிபாசிட்தொகையை இழப்பதுடன் நிர்வாகத்திற்கு ஏற்படும் சகல நஷ்டத்திற்கும் முன்டெண்டர்தாரர் / ஏலதாரரிடம் வசூலிக்கப்படும். லாபம் ஏற்பட்டால் அதில் உரிமைகிடையாது.
9. டெண்டர்/பொதுஏலம் 1432ம் பசலிக்கு 01.07.2022 முதல் 30.6.2023 முடிய உள்ள காலத்திற்கு மட்டும்.
10. டெண்டர்/பொதுஏலத்தை எவ்வித காரணமும் தெரிவிக்காமல் ஒத்திவைக்கவோ, ரத்து செய்யவோ ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.
11. டெண்டர்/பொதுஏலம் சென்னை இந்துசமயஅறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ரத்து அதிகாரத்திற்குட்பட்டது.

12. டெண்டர்/பொதுஏலம் உறுதி செய்து உத்தரவு பெற்றவுடன் டெண்டர்தாரர்/பொது ஏலதாரர் தனது சொந்தச்செலவில் 10 தினங்களுக்குள் ரூ 50/– மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டும். தவறினால் மறுடெண்டர்/பொதுஏலம் நடத்தி அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நிபந்தனை 7ல் கண்டபடி டெண்டர்தாரர்/ ஏலதாரர் பொறுப்பாக்கப்படும். டெண்டர்/ஏல நிபந்தனைகளை கூட்டவோ குறைக்கவோ மாற்றம் செய்யவோ டெண்டர்/ஏலம் நடத்தும் அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.
13. பொதுஏலம்/டெண்டரில் கலந்து கொள்பவர்கள் ஏலம் நிபந்தனைகளை தெரிந்தே கலந்து கொண்டதாக கருதப்படும்.
14. உரிமம் குத்தகைகளை இந்துசமயத்தினர் மட்டுமே ஏல/டெண்டர் எடுக்க அனுமதிக்கப் படுவர்.
15. ஷ திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்தவேண்டியவர்கள் கோயிலுக்கு எதிராக வழக்கு **நடத்தியவர்கள் மற்றும் நடத்துபவர்கள் அவர்களின் உறவினர்கள்** கோயிலின் நன்மைக்கு புறம்பாக செயல்படுபவர்கள் அல்லது மேலேகண்ட வகையினருக்காக பினாமியாக கேட்பவர் என திருக்கோயில் நிர்வாகிகளால் கருதப்படுபவர்கள், ,மற்றும் 21 வயது நிறைவுபெறாதவர்கள் ஏலம்/டெண்டர் கேட்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.
16. ரூ 30,000/– க்கு மேல் குத்தகை எடுக்கும் குத்தகைதாரர்கள் 1ரூ கூஊளு வருமானவரி செலுத்திட வேண்டும்.
17. மேலேகண்ட ஏல இனத்தில் வரிசை எண் 1 மட்டும் மாசிமகம் தெப்பத்திருநாளில் கார்பார்க்கிங் வசதி, கழிவறை வசதி, சுகாதார வசதி மற்றும் குடிதண்ணீர் வசதி, ஆகியவற்றை ஏலதாரரே ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். மற்றும் தேவஸ்தானம் எடுக்கும் முடிவுக்கு ஏலதார் கட்டுப்படவேண்டும்.
18. பொதுஏலம்/டெண்டரில் கலந்துகொள்பவர்கள் பான்கார்டு, ஆதார் கார்டு நகல்கள்**இணைக்கப்படவேண்டும்.**

<u>ஐ வாகனகட்டணம் வசூல் செய்யும் உரிமம்</u>

| வ.எண் | வாகனங்கள் விபரம் | கட்டணம் விபரம் |
|---|---|---|
| ஆ | பேருந்துகள் லாரிவகை | 60.00 |
| ஆ | வேன், மினி பஸ் வகை | 30.00 |
| இ | அம்பாசிடர், சுமோ குவாலிஸ் மற்றும் புதிய கார்கள் | 20.00 |
| ஈ | ஆட்டோ மூன்று சக்கர வாகனங்கள் | 15.00 |

1. இவ்உரிமை ஏலம் எடுத்தவர்கள் 24 மணிநேரம் வீதம் இந்த கட்டணம் நிர்ணய அடிப்படையில்தான் வாகன கட்டணங்கள் வசூல் செய்யப்படவேண்டும்.
2. திருக்கோயில் விளம்பர பலகையில் கண்டுள்ளபடியே வாகன கட்டணம் வசூல் செய்யப்படவேண்டும். இதில் கண்டுள்ள கட்டணத்திற்கு கூடுதலாக வசூல் செய்யப் படுவதாக புகார் வரப்பெற்றால் வசூல் உரிமை ரத்து செய்யப்பட்டு மறுஏலம்/ டெண்டர் வைக்கப்படும். மறுஏலம்/டெண்டரில் நஷ்டம் ஏற்பட்டால் முன் ஏல/டெண்டர்தாரரி டமிருந்து நஷ்டத்தொகை வசூல் செய்யப்படும். லாபம் ஏற்பட்டால் எவ்வித தொடர்ச்சியுமில்லை.
3. உரிமைதாரர் தனது சொந்தச்செலவில் கட்டணச்சீட்டு அச்சடித்து திருக்கோயில் அலுவலக முத்திரை பெற்றபின்னர்தான் பயன்படுத்தவேண்டும்.
4. அரசு வாகனங்கள், மற்றும் திருக்கோயில் நிர்வாகம் சார்ந்த வாகனங்கள்எவற்றிற்கும் வாகன பாதுகாப்பு கட்டணம் வசூல் செய்யக்கூடாது.
5. வாகனகட்டண விபரத்தை பக்தர்கள் தெரியும்வண்ணம் குத்தகைதார் பெயருடன் குத்தகைதார் செலவில் அறிவிப்பு பலகை நிறுவவேண்டும்.

<u>பிரசாதங்கள் தயாரித்து விற்பனை செய்யும் நிபந்தனைகள்</u>

தினசரி தயார் செய்யும் பிரசாதங்களை பாதுகாப்பான முறையில் சுகாதார முறைப்படி பொட்டலமாகவோ அல்லது கவர்களில் வைத்து விற்பனை செய்யவேண்டும்.

1. பிரசாதங்கள் சுத்தமான கலப்பிடமில்லாத தரமான பொருட்களை கொண்டு தயாரிக்க வேண்டும்.
2. பிரசாதம் தயாரிப்பவர் மற்றும் விற்பனை செய்யும் பணியாளர்கள் இந்து மதத்தைசேர்ந்தவ ராகவும் ஆரோக்கியமானவராகவும், சுத்தமானவராகவும் இருக்க வேண்டும்.
3. தினசரி தயாரிக்கப்படும் பிரசாதங்கள் குறித்த அறிவிப்பு பட்டியலும் விலைப்பட்டியலும் எல்லோர் பார்வைக்கும் தெரியும்இடத்தில் வைத்திருக்கவேண்டும். பாலிதீன்பைகள்( கவர்) பயன்படுத்தகூடாது.

4. பிரசாதங்கள் தயாரிக்கப்படுவதையும் விற்பனை செய்யப்படுவதையும் கண்காணிக்க ஆலய நிர்வாகத்தினருக்கு அதிகாரம் உண்டு. பொதுமக்களிடமிருந்து புகார் ஏதும் ஏற்படாவண்ணம் எல்லா ஏற்பாடுகளையும் ஏலம்/டெண்டர் எடுப்பவர் செய்துகொள்ளவேண்டும்.
5. பிரசாதம் தயார் செய்ய பித்தளை பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டால் 3 மாதங்களுக்கு ஒருமுறையாவது ஈயம் பூசி நல்லமுறையில் வைத்துக்கொள்ளவேண்டும்.
6. பிரசாதம் தயாரிப்பவர் (ஏலம்/டெண்டர் எடுத்தவர்) தான் சொந்தப்பொறுப்பில் பிரசாதங்கள் தயாரிக்கப்படும் சாமான்களையும் பாத்திரங்களையும் தங்களது பாதுகாப்பில் வைத்துக் கொள்ளவேண்டும். இதில் ஏற்படும் குறைபாடுகளுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.
7. ஏலதாரர் அறிவிப்பில் கண்ட பிரசாதங்களை தவிர வேறு பிரசாதங்களை தயாரித்து விற்பனைசெய்யவேண்டுமானால் எழுத்து மூலம் அலுவலகத்திற்கு மனுச்செய்து தலைமை அலுவலகம் அனுமதி பெற்றபின் ஏற்பாடு செய்யவேண்டும்.
8. பிரசாத ஸ்டால் விற்பனை செய்யும் இடத்தில் எரியும் மின் விளக்கிற்கு மாதம் 1க்கு மின் கட்டணமாக ரூ 150/– திருக்கோயிலுக்கு செலுத்தவேண்டும்.
9. பிரசாதம் தயாரித்து விற்பவர்கள் தேவஸ்தானம் குறிப்பிடும் இடத்தில் தயாரித்து குறிப்பிடும் இடத்தில் மட்டும் விற்பனை செய்யவேண்டும்.
10. ஆலய உபயதாரர்களுக்காக தயாரிக்கப்படும் பூஜை பிரசாதங்களுக்கு ஏலதார் /டெண்டர்தார் உரிமைஏதும் கேட்க ஆட்சேபனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.
11. தினசரி தயாரிக்கப்படும் பதார்த்தங்களில் ஒரு செட் எல்லாவகையான பிரசாதங்களையும் ஆலய அலுவலகத்திற்கு சோதனைக்காக இலவசமாக கொடுக்கப்படவேண்டும்.
12. பிரசாதங்கள் குறிப்பிட்ட எடை அளவுக்கு குறைவதாகவும், தரம் குறைவானதாகவும் இருந்தால் விற்பனை உடன் நிறுத்துவதுடன், ஏல/டெண்டர் விற்பனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
13. ஷ பிரசாத ஸ்டால் விற்பனை செய்யும் உரிமம் பெற்றவர் தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறையில் பதிவு செய்து பதிவுசான்று பெற்றுக்கொள்ளவேண்டும்.

இந்துசமயஅறநிலையத்துறை சென்னை ஆணையர் அலுவலக சுற்றறிக்கை ந க எண் 10163/2016 யு4 நாள் 07.03.2016ன்படி குத்தகைதார் விற்பனை செய்யப்படவேண்டும்.

| வ.எண் | பிரசாதத்தின் பெயர் | எடை | விற்பனை விலை |
|---|---|---|---|
| 1 | லட்டு | 50 கிராம் | 10.00 |
| 2 | முருக்கு | 50 கிராம் | 10.00 |
| 3 | அதிரசம் | 50 கிராம் | 10.00 |
| 4 | சக்கரைபொங்கல் | 100 கிராம் | 10.00 |
| 5 | புளியோதரை | 100 கிராம் | 10.00 |
| 6 | தேன்குழல் | 50 கிராம் | 10.00 |
| 7 | மிளகுவடை | 50 கிராம் | 10.00 |
| 8 | கற்கண்டு | 50 கிராம் | 10.00 |
| 9 | மிளகுதட்டை | 50 கிராம் | 10.00 |
| 10 | புட்டமுது | 50 கிராம் | 10.00 |
| 11 | வெண்பொங்கல் | 100கிராம் | 10.00 |
| 12 | தயிர்சாதம் | 100 கிராம் | 10.00 |
| 13 | அப்பம் | 50 கிராம் | 10.00 |
| 14 | தினைமாவு | 50 கிராம் | 10.00 |

ஒம்/பா.இளங்கோ
தேவஸ்தானமேலாளர்

/உ ந உ ப/

சிரஸ்தார்(பொ) 27/5/2022

27.5.2022